வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632

# ஈழநாடு


Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 16.01.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 16 பக்கங்கள் : 08

# இனவாதமற்ற - வளமான நாட்டை உருவாக்குவதே அரசின் நோக்கம்!



## பொங்கல் விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 16

எந்த மொழியை பேசினாலும் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அனைத்து பிரஜைகளும் கௌரவத்துடன் வாழக்கூடிய இனவாதமற்ற, தேசிய ஒற்றுமை நிறைந்த வளமான நாட்டை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் தினமான நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் வேலணை ஐயனார் கோயில் விளையாட்டு மைதானத்தில் நடந்த தைப் பொங்கல் பங்கேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் மக்களின் முக்கியமானதொரு கலாசார தினமான தைப்பொங்கல் தினத்தில் நீங்கள் திருவிழாவை கொண்டாடும் நிலையில் எனக்கும் உங்களுடன் இணைவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையை பாக்கியமாகக் கருதுகிறேன். இதே போன்று இந்து மக்களின் கலாசாரத்துக்கு அமைய இன்றுதான் புத்தாண்டு பிறக்கிறது. புத்தாண்டு பிறப்பதோடு புதிய பிரார்த்தனைகள், எதிர்பார்ப்புகள்

07

# தமிழர் வாழும் இடங்களெங்கும் தைப்பொங்கல் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 16

தைப்பொங்கல் நாடுமுழுவதும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் எங்கும் நேற்றைய தினம் சிறப்பாகக் கொண்டாப்பட்டது.

உழவர் திருநாள் என்று போற்றப்படும் தைப்பொங்கல் தினத்தில் சூரிய கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தைப்பொங்கலை தமிழர்கள் கொண்டாடுகின்றனர். தைப்பொங்கல் தினமான நேற்று தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கும் மக்கள் பொங்கல் பொங்கி - பகிர்ந்து உண்டு மகிழ்ந்தனர்.



தைப்பொங்கல் தினமான நேற்று தமிழ் மக்கள் வாழும் பகுதிகளெங்கும் அலங்கரிக்கப்பட்டு பொங்கல் பொங்கப்பட்டது. அத்துடன், இந்து கோவில்கள், கத்தோலிக்க தேவாலயங்களில் சிறப்பு பூசைகள் நடைபெற்று பொங்கல் பொங்கப்பட்டன.

(ஐ)

பிரஜா சக்தி திட்டத்துக்கு எதிர்ப்பு

# ஜனாதிபதியின் யாழ். நிகழ்வுகளை புறக்கணிக்கிறது தமிழ் அரசு கட்சி

யாழ்ப்பாணம், ஜன. 16

பிரஜா சக்தி திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி பங்கேற்கும் நிகழ்வுகளில் இலங்கை தமிழ் அரசு கட்சியினர் பங்கேற்க மாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

07

# ஒவ்வொரு சமூகத்தின் உரிமைகளை பாதுகாக்கும் நாட்டை கட்டமைப்போம்

## தேசிய தைப்பொங்கல் விழாவில் பிரதமர்



கொழும்பு, ஜன. 16

ஒவ்வொரு சமூகத்தின் கலாசார மற்றும் மத உரிமை களைப் பாதுகாப்பதன் அடிப்படையில் இலங்கையைக் கட்டியெழுப்ப

07

# தமிழ் அரசு, ஜ. த. தே. கூட்டணி இன்று யாழில் சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 16

இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் இன்றைய தினம் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளன.

மாகாண சபைகள் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் உத்தியை கையாண்டு - உரிய அழுத்தங்களை பிரயோகித்து அந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பிலேயே அவை பேசவுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பு இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமை பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில், தமிழ் அரசு கட்சியின் முக்கிய

07

# போர் குற்றவாளிகளை தண்டிக்கும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, ஜன. 16

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் போர் குற்றங்கள் - மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டோரை தண்டிக்கவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது. அந்தக் கடப்பாடு நிறைவேற்றப்படும் வரை பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தை மேலும் வலுவாகப் பிரயோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கீழ்

07

# மன்னார் காற்றாலை மின் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார் ஜனாதிபதி அநுர!

மன்னார், ஜன. 16

மன்னாரில் புதிய காற்றாலை மின் திட்டத்துக்கு நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அடிக்கல் நாட்டி வைத்தார்.

கொன்னயன் குடியிருப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்த காற்றாலை மின் திட்டம் 50 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். இது, நாட்டின் தேசிய மின் வழங்கலுக்கு

07




# டிப்பர் விபத்துக்குள்ளானதில் இளைஞர்கள் இருவர் மரணம்

## தைப்பொங்கல் நாளில் நாவற்குழியில் சோகம்



யாழ்ப்பாணம், ஜன. 16

மணலுடன் வந்த டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானதில் அதில்

07

திருமலை புத்தர் சிலை விவகாரம்:

# மறியலில் வைக்கப்பட்ட பிக்கு உண்ணாவிரதம்

திருகோணமலை, ஜன. 16

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலாங்கொடை கஸ்ஸப தேரர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்ற உத்தரவின்படி விளக்கமறியலில் வைக்க ப்பட்டுள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டது முதல் அவர் நேற்றிரவு வரை உணவு,

07

# உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கைக்கு 1.6 கோடி டொலர் தேவை

## ஐ. நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு

கொழும்பு, ஜன. 16


டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் மீட்பு நடவடிக்கைகள், வாழ்வாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு கோடியே 65 இலட்சம் அமெரிக்க டொலர் சர்வதேச உதவி தேவைப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பு அறிவித்துள்ளது.

டித்வா புயல் நாட்டின் 25 மாவட்டங்களையும் பாதித்துள்ளது. இதனால் 22 இலட்சத்துக்கும்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் தம் திருநாளான தைப்பொங்கல் தினமான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிறப்பு பூசை நடைபெற்று சுவாமி உள்வீதியுலா வந்தபோது...! (படம் - ஐ. சிவசாந்தன்)

# சுதந்திரமான தொல்லியல் ஆய்வு மூலம் தமிழர் வரலாற்றை மீட்டெடுக்க வேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்து

வவுனியா, ஜன. 16

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சுதந்திரமான தொல்லியல் ஆய்வின் மூலம் தமிழ் வரலாற்றை மீட்டெடுக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் போராட்ட இடத்தில் தைப்பொங்கல் தினமான நேற்றைய தினம் நடத்தப்பட்ட போராட்டத்திலேயே இந்த விடயத்தை அவர்கள் வலியுறுத்தினர்.

தைப்பொங்கல் நாளில், காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மாரான நாங்கள், வவுனியாவில் உள்ள ஏ-9 வீதியில் 3 ஆயிரத்து 251 நாட்களுக்கும் மேலாக எமது தொடர்ச்சியான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறோம்.

தியாகம், வலி, மற்றும் அசைக்க முடியாத உறுதிப்பாடு நிறைந்த இந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள் குறித்த உண்மைக்கான எங்கள் கோரிக்கையை மட்டுமல்லாமல், தமிழ் வரலாறு, கண்ணியம் மற்றும் இறையாண்மையை மீட்டெடுப்பதற்கான ஓர் அழைப்பையும் விடுக்கிறோம்.

தமிழ் அறிஞர்களின் தலைமையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒரு சுதந்திரமான தொல்லியல் ஆய்வு பிரிவை நிறுவ வேண்டும். இது, தமிழ் சைவத்தின் மற்றும் தமிழ் பௌத்தத்தின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்து வெளிக்கொணரவும் தென்னிந்தியா மற்றும் வரலாற்று ரீதியாக சிலோன் என்று அழைக்கப்பட்ட தீவு உட்பட தமிழ்நாடெங்கிலும் செழித்தோங்கிய பண்டைய தமிழ் நாகரிகத்தை ஆவணப்படுத்தவும் வேண்டும்.

இந்த நிலம் சிங்கள இனத்துக்கு முன்பும் சிங்கள மொழிக்கு முன்பும் மகாவம்சம் எழுதப்படுவதற்கு முன்பும் தமிழர்களுக்குச் சொந்தமானது. இந்த வரலாற்று உண்மை தமிழ் பிள்ளைகளுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும், சாதாரண தமிழ் பொதுமக்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும். இது சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். தமிழர்கள் நமது கதையை உரக்க, தெளிவாக, மீண்டும் மீண்டும் சொல்லும்போது சிங்களத் தலைவர்கள் தங்கள் கதையைத் தொடர்ச்சியாகக் கேட்க செய்ததைப் போலவே, ஐரோப்பிய ஒன்றிய மற்றும் அமெரிக்க இராஜதந்திரிகளும் செவிசாய்ப்பார்கள் - என்று கூறினர். (ஐ- 10)

# தமிழ் அரசின் வடமராட்சி பணிமனையில் பொங்கல்

வடமரட்சி, ஜன. 16

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தைப்பொங்கல் வடமராட்சி மடத்தடி பணிமனையில் நேற்று நடைபெற்றது.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொது செயலாளர் எம். ஏ. சுமந்திரன் விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் கு.சுரேந்திரன, உப தவிசாளர் தயாபரன், பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை நகர சபை, வடராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் தொண்டர்கள், ஆதவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02)



## மன்னாரில் பொங்கல் சிறப்புற நடைபெற்றது

மன்னார், ஜன. 16

மன்னாரில் இந்து, கத்தோலிக்க தமிழ் மக்கள் நேற்றைய தினம் பொங்கல் பண்டிகையை அமைதியாகக் கொண்டாடினர்.

இந்து, கத்தோலிக்க ஆலயங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மக்கள் மகிழ்ச்சியாகவும் பொங்கல் பொங்கி பகிர்ந்து தைப்பொங்கலை கொண்டாடியமையை அவதானிக்க முடிந்தது. (ஐ)

# தேசிய மக்கள் சக்தி கட்சியின் யாழ். பணிமனையில் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 16

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண பணிமனையில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தலைமையில் நேற்று தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது.

இதன்போது இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



# அந்தோனியார் தேவாலயத்திலும் தைப்பொங்கல் விழா சிறப்புற்றது

கிளிநொச்சி, ஜன. 16

கிளிநொச்சி அந்தோனியார் ஆலயத்தில் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று சிறப்புற நடைபெற்றது. இதன்போது, விசேட வழிபாடும் நடைபெற்றது.

நேற்று காலை 6 மணியளவில் தேவாலயத்தின் பிரதான பங்குத்தந்தை தலைமையில் நிகழ்வு நடைபெற்றதுடன் காலை 7.30 மணிக்கு விசேட வழிபாடும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆலயத்தை சேர்ந்த பொதுமக்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# இளையோர் புத்தக அரங்க கொண்டாட்டம் இணுவிலில்

யாழ்ப்பாணம், ஜன. 16

இணுவில் அறிவாலயத்துடன் மக்கள் கலை இலக்கிய பேரவை இணைந்து நடத்தும் இளையோர் புத்தக அரங்கக் கொண்டாட்டம் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மாபெரும் சிறுவர் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரையும் நடைபெறவுள்ளன.

அத்துடன், நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நாடகமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இதில், வரவேற்பு நடனத்தை அஸ்ரன் சர்வதேசப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர். தொடர்ந்து, “திருஞானசம்பந்தர்” என்ற தலைப்பில் கதாப்பிரசங்கத்தை சிவகாமி அறநெறி பாடசாலை மாணவி செல்வி தர்ஷனா திருப்பதிநாதன் ஆற்றுவார். இளையோர் இலக்கிய நூல்களின் அறிமுக வரிசையில் சிறீ ரஞ்சனியின் “மீராவின் கோபம்”, யோகராணி கணேசனின் “இளங்கோவும் தாத்தாவும்”, ராணி சீதரனின் “பூவுலகில் ஒரு புதையல்” ஆகிய நூல்களின் அறிமுக உரைகள் நடைபெறும்.

தொடர்ந்து, நாடக ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமாரின் எழுத்துருவில், அதிபர் க. பேரின்பகுமாரின் நெறியாள்கையில் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் “மணிப் பூனையார்” சிறுவர் நாடகம் அரங்கேறும். (ஐ)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் தைப்பொங்கல் சிறப்பு பூசை!

வடமராட்சி, ஜன. 16

வடமராட்சி சிறீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் உழவர் திருநாளாம் தைத் திருநாள் பொங்கல் சிறப்பு பூசைகள் ஆலய பிரதம குரு கணபதீஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நேற்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசைகள் நடை பெற்று வல்லிபுர ஆழ்வார் உள்வீதி உலா வந்து பொங்கல், விசேட பூசைகள் நடைபெற்றன. (ஐ-02)



# தரம் 6 கல்வி சீர்திருத்தத்தால் நிதி இழப்புகள் இலஞ்ச ஆணைக்குழுவில் முறையிட முடிவு!

கொழும்பு, ஜன. 16

6ஆம் தர கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான நிதி இழப்புகள் குறித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறையிட பரிசீலிக்கிறதென பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜயரத்ன கவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய பாடத்தொகுதிகளை தயாரித்து அச்சிடுவதில் ஏற்பட்ட செலவுகள் தற்போது மீளாய்வு செய்யப் படவேண்டும் என்பதால், இழந்த நிதியைப் பொறுப் பானவர்களிடமிருந்து மீட்டெடுக்க சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி வலியுறுத்துகிறது.

கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பாராளுமன்றம் போன்ற தொடர்புடைய தரப்புகளுடன் ஆலோசனை இல்லாமல் சீர்திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டதால் அரசுப் பணம் வீணடிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டினார்.

அச்சிடல், விநியோகம் உள்ளிட்ட செலவுகள் வரிப் பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பொறுப்பாளர்கள் கணக்குக்காகக் கேட்கப்படவேண்டும் என அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.01.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எதிரணிகள் ஒன்றுபடுவதன் சாத்தியம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இந்த ஆண்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் எண்ணம் இருப்பதுபோல் தெரியவில்லை. கடுமையான அழுத்தங்கள் இருந்தாலன்றி, அரசாங்கத்தைத் தேர்தலுக்கு நிர்ப்பந்திக்கும் ஆற்றலும் எதிரணிகள் பக்கத்தில் இருப்பதாகத் என்று தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகள் பக்கத்திலிருந்துதான் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். அதாவது, ஈழத் தமிழ் கட்சிகள், முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அழுத்தங்களை பிரயோகிக்கலாம். ஆனால், அதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில், தங்களுக்குள் ஒன்றுபட முடியாத நிலையிலிருக்கும் தமிழ் கட்சிகள் ஏனைய சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளோடு ஓர் உடன்பாட்டுக்கு வருவது என்பதும் சாத்தியமான ஒன்றல்ல - இந்த நிலையில் தேர்தல் ஒன்றின் அடிப்படையில் அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட போவதில்லை.

தேர்தல் ஒன்று இடம்பெற்றாலும்கூட, தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்புக்கு அமைவாக நிலைமைகள் இருக்குமா என்பதும் சந்தேகமே! ஏனெனில், அநுர குமார திஸநாயக்க என்னும் ஒரு கவர்ச்சியைத் தவிர தேசிய மக்கள் சக்தியிடம் வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் மாகாண சபைகள் தேர்தலில் பின்னடைவுகளை சந்தித்து, தங்களின் இயலாமையை நிரூபிக்க அரசாங்கம் முற்படுமா என்னும் கேள்வியும் உண்டு.

தவிர, மாகாண சபைகள் தேர்தல் என்பது முன்னைய ஆட்சியாளர்களாலும் பிற்போடப்பட்ட ஒன்றுதான். அப்போது தேர்தல் பிற்போடப்பட்டபோதும், நாட்டில் எவரும் கிளர்ந்து எழவில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மாகாண சபைக்கு எந்தவொரு பிரதான கட்சியும் கொடுக்க வில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே சில கருத்துகளை கூறினாலும்கூட, இன்று மாகாண சபைகள் பற்றிப் பேசும் அனைவருமே கடந்த காலத்தில் அதனைக் கண்டுகொள்ளாமல் இருந்தவர்கள்தான். இந்த அடிப்படையில் நோக்கினால், மாகாண சபைகள் தேர்தலை பிற்போட்டதில் அனைவருக்கும் பங்குண்டு.

ஒருவேளை எதிரணிகள் மிகவும் பலமான நிலையில் இருந்தால் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கலாம். ஏனெனில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மாகாண சபைகள் தேர்தலில் தங்களின் வாக்கு பலத்தை காண்பிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. ஆனால், எதிரணிகள் அவ்வாறானதொரு பரந்த ஐக்கிய முன்னணியாக மாறுவதற்கான சூழலும் கனியவில்லை. இந்த நிலையில்தான் ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் பிரேமதாஸவும் ஒன்றிணைந்து பயணிப்பது தொடர்பில் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக தனக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்னும் அடிப்படையில்தான், சஜித் பிரேமதாஸ தனி வழியில் சென்றார். ஐக்கிய தேசியக் கட்சி - ஐக்கிய மக்கள் சக்தி முரண்பாடு என்பது அடிப்படையில் கட்சி பிரச்னையில்லை - மாறாக, ரணில் - சஜித் தன்முனைப்புப் பிரச்னை. இந்தப் பிரச்னை தீர்ந்தால்தான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சஜித் பிரேமதாஸ இணைந்து செயல்படுவதற்கான சூழல் கனியும்.

இந்தப் பின்னணியில் நோக்கினால் ஆட்சியில் நீடிப்பதற்காக சில நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தேசிய மக்கள் சக்திக்கு உண்டு. முக்கியமாக, ஜே. வி. பி.க்கு உண்டு. இலங்கையில் வரலாற்றில் முதன்முதலாக கொழும்பு உயரடுக்கினருக்கு மாற்றான ஒரு தரப்பு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் நிலையில் அதன் ஆயுள் மிகவும் குறுகியதாக இருக்கப் போகிறதா அல்லது இல்லையா என்பதுதான், ஜே. வி. பி.யின் பிரச்னை. இந்தப் பிரச்னையை கையாளும் அணுகுமுறைகளுக்கே அவர்கள் முன்னுரிமையளிப்பார்கள்.

## சூரியசக்தி மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்புத்தி செய்யக்கூடிய வாய்ப்பு நாட்டில்!

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் தற்போது நீர்மின்சாரத்திற்கு மேலதிகமாக காற்று மற்றும் சூரிய சக்தி மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளதாக இலங்கை மின்சார சபையின் புதிய சேவையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பிரியந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் தற்போது நீர் மின்சாரத்திற்கு மேலதிகமாக காற்று மற்றும் சூரிய சக்தி மூலம் அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது. கடந்த காலங்களில் மக்களிடையே ஏற்பட்ட ஆர்வம் மற்றும் உலகளாவிய அழுத்தங்கள் காரணமாக, அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை நோக்கி நகரத் தொடங்கியது. இதன் விளைவாக, சுமார் 2,100 மெகாவாட் மின்சா ரம் வீடுகளின் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி அமைப்புகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது நுகர்வோர் தங்களின் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவும், சிலர் வங்கி மூலம் கடன் பெற்று வருமானம் ஈட்டவும் உதவியாக இருந்தது. அரசாங்கம் எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்திற்குள் அனைத்து சூரிய சக்தி நுகர்வோருக்கும் மீட்டர்களைக் கட்டாயமாக்கத் திட்டமிட்டுள்ளது. இதுவரை நுகர்வோர் தங்களுக்கு விருப்பமானால் மட்டுமே இந்த மீட்டர்களைப் பயன்படுத்தி வந்தனர். குறிப்பாக இரவு நேரங்களில் மின்சார வாகனங்களை மின்னேற்றம் செய்ய இது உதவியாக இருந்தது. தற்போதைய ஒப்பந்தங்களை மீறி, வலுக்கட்டாயமாக இந்த மீட்டர்களைப் பொருத்துவதன் மூலம் சூரிய சக்தி அமைப்புகளைப் பயனற்றதாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

இதுவரை மாநகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்த வீதி மின் விளக்குகளுக்கான கட்டணத்தை இனி நுகர்வோரிடமே அறவிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மாநகர சபைகள் ஏற்கனவே மக்களிடம் வரி மற்றும் ஏனைய கட்டணங்களை அறவிடும் நிலையில், இந்தச் சுமையையும் மக்கள் மீது சுமத்துவது அநீதியானது - என்றார். (அ)

## இலங்கைக்கான வெள்ள நிவாரணம் மீட்பு முயற்சிகளுக்கு பிரேசில் உதவி

கொழும்பு, ஜன. 16

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இலங்கையின் வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவாக பிரேசில் கூட் டாட்சிக் குடியரசின் அரசாங்கம் 10 உயர்திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு அலகுகளை நன்கொடையாக வழங்கியது.

இந்த நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கையில் உள்ள பிரேசில் தூதரகத்தின் பதில் தூதுவர் மோனிகா மரியா மீரேல்ஸ் நாசரால், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்திடம் கடந்த 9ஆம் திகதி வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச் சில் முறையாக ஒப்படைக்கப்பட்டன.

ஒரு நாளைக்கு 10,000 லீற்றர் சுத்திகரிப்பு செய்யும் திறன் கொண்ட இந்த நீர் சுத்திகரிப்பு அலகுகள், தினமும் சுமார் 7,000 பேருக்கு சுத்தமானதும், பாதுகாப்பானதுமான குடிதண்ணீரை கூட்டாக வழங்கும்.

உடனடி பேரிடர் நிவாரணம் எனும் எண்ணக்கருவிற்கு, பாடசாலைகள் மற்றும் மருத்துவமனை போன்ற பொது உட்கட்டமைப்பில் நீண்டகால ஒருங்கிணைப் புக்காகவும், இத் தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நன்கொடையைப் பெற்ற அமைச்சர் ஹேரத், பிரேசிலின் சரியான நேரத்தில் வழங்கப்பட்ட உதவிக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன், இது இரு நாடுகளின் வலுவான இரு தரப்புக் கூட்டாண்மை மற்றும் மனிதாபிமான ஒத்துழைப்புக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும்-என கூறினார். (அ)

## போர்ட் சிற்றி அபிவிருத்திக்கு 30 கோடி டொலர்


கொழும்பு, ஜன. 16

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்காக 30 கோடி டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீட்டை வழங்க சி.எச்.ஈ.சி போர்ட் சிற்றி லிமிட்டெட் நிறுவனம் உறுதி அளித்துள்ளது


புதிய ஆண்டின் ஆரம்பத்திலேயே மேற்கொள்ளப்பட்ட இந்த முதலீட்டு உறுதி, இலங்கையின் நீண்டகால பொருளாதார வளர்ச்சி மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவதாக அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான ஒழுங்குமுறை செயல்முறைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் மிகப்பெரிய நகர அபிவிருத்தித் திட்டமான கொழும்பு துறைமுக நகரத்தின் இரண்டாம் கட்ட பணிகளை முன்னெடுக்க இந்த முதலீடு வழிவகுக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். சில வியங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர் களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். ஆதரவு பெருகும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். நல்லன நடக்கும் நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப்பழ குங்கள். இடம்பொருள்ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசை வாட்டும். வியாபாரத்தில் உழைத்து லாபம் பெறுவீர்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**மகரம்**
உங்களின் அறிவாற்குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய பாதை தெரியும் நாள்.

# அதிவேக மோட்டார் சைக்கிள்களால் அடிக்கடி ஏற்படும் பாரிய விபத்துகள்

## வவுனியா மக்கள் கடும் விசனம்

வவுனியா, ஜன. 16
வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திச் செல்லும் இளைஞர்களால் தொடர்ச்சியான விபத்துச்சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக மாலை வேளைகளில் அந்த வீதியை அதிகளவான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில், குறித்த இளைஞர்களின் செயல்பாடு காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இந்த வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டோவில் பயணித்த 22 வயது பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்ற 17 வயது சிறுவனும் அதில் பயணித்த 16 வயது சிறுவனும் காயமடைந்துள்ளனர். அத்தோடு இந்த விபத்தில் சிக்கிய பிறிதொரு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 60 வயது நபர் உட்பட நான்கு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, அங்கு இடம்பெறுகின்ற அநேகமான விபத்துக்கள் அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்தும் இளைஞர்களால் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான தொடர்ச்சியான விபத்து சம்பவங்களால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் அச்ச நிலையுடன் தமது பயணத்தை தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (எ-10)

# மன்னார் கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாக காணப்படும்

கொழும்பு, ஜன. 16
மன்னார் கடற்பிரதேசங்கள் தொடர்ந்து கொந்தளிப்பாக காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் காணப்படும் மழையுடனான வானிலை நேற்று முதல் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்கு பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக் கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் சாதாரண முதல் மிதமான அலை வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழில் 12 கிலோ கேரள கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், ஜன. 16
வடமராட்சி, திக்கம் பகுதியில் 12 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று முன்தினம் மாலை குறித்த கஞ்சா பொதிகள் பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதன்போது சந்தேக நபர் ஒருவர் தப்பியோடிய நிலையில் மோட்டார் சைக்கிளொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (எ)

# சிரேஷ்ட பிரஜைகளின் உடலியல், உளவியல் ஆரோக்கியத்தை மேம்படுத்த நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 16
முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் கரவெட்டி பிரதேசத்தில் நடைபெறவுள்ள முதியோருக்கான மருத்துவ முகாம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், ஒரு குழந்தை பிறந்தது முதல் முதியவராகும் வரை அரசாங்கம் பல உத்தியோகத்தர்களை நியமித்து சேவையாற்றி வருகிறது. கினின் சிறிலங்கா செயல்திட்ட நடமாடும் சேவைகளை மேற்கொண்டதன் மூலம் [illegible] நடமாடும் சேவை தேவைப்பாடுடையதாக காணப்படுகிறது. 60 வயதினை பூர்த்தி செய்த சிரேஷ்ட பிரஜைகளின் உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதனை நோக்கமாக கொண்டு சுகாதாரப் பிரிவானது சமுதாய அமைப்புகளின் பங்குபற்றலின் மூலம் பொருளாதார, உடல் மற்றும் உளவியல் ரீதியில் நலிவுற்ற முதியோர் சமுதாயத்தினருக்கு அவர்கள் வசிக்கும் இடத்துக்கே சென்று உயர் தரத்திலான சுகாதார சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இவ் மருத்துவ முகாமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நடமாடும் சேவை இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. முதலாம் நாள் படுக்கையில் உள்ள முதியவர்கள் வீட்டுக்கு சென்று மருத்துவம் பார்த்து ஒரு மாதத்துக்கு தேவையான மருந்துகளை வழங்குதல். இரண்டாம் நாள் நிகழ்வாக பொது மண்டபத்தில் மருத்துவ முகாம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ முகாம் நெல்லியடி மத்திய கல்லூரியில் பெப்ரவரி 6 ,7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேலும், இந்த நடமாடும் சேவையில் தொற்றா நோய்கள், கண், காது, மூக்கு தொடர்பான நோய்கள் மற்றும் எலும்பியல் மருத்துவம் போன்ற மருத்துவ பரிசோதனைகள் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DAN
பொங்கல் திருவிழா

இடம் – யாழ் திருவள்ளுவர் பண்பாட்டு
மையத் திறந்தவெளி அரங்கு
நாளை ஜனவரி 17ஆம் திகதி

மாலை 3.00 மணிக்கு
பொங்கலுடன் கூடிய
கோலப்போட்டி, உறியடித்தல்
பரதநாட்டியம், நாட்டுபுற, பாரம்பரிய,
கலை கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சாதனைத்தமிழன் விருது பெறுகிறார்
**P.S.பாலமுருகன்**





இரவு 07.00 மணிக்கு
தென்னிந்திய சினிமா பாடகர்
**புஷ்பவனம் குப்புசாமி**
பங்குபற்றும்
**மாபெரும் இசை நிகழ்ச்சி**
அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்

REVLON
NLB NATIONAL LOTTERY
BANK OF CEYLON BOC Bankers to the Nation
Signal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 2025 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருது பெறும் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ஈழநல்லூர் பி. எஸ்.பாலமுருகன்!

**17.01.2026 சனி இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டுமையத் திறந்தவெளி அரங்கில் விருது வழங்கப்படுகின்றது.**



உலகோரால் மங்கலவாத்தியம் எனக்கொள்ளப்படும் சிறப்பை நாதஸ்வரம் பெற்றுள்ளது. நாதகான வள்ளல்களாகச் சிறப்புப் பெறும் கலைஞர்கள் காலத்திற்குக் காலம் எம்மண்ணிலும் பாரததேசத்தின் தென்னாட்டிலும் உதயமாகிவருகின்றனர். அத்தகையோருள் இன்றைய சூழலில் கூர்மையாக நோக்கப்படும் பெருங்கலைஞனாக பிஎஸ்பி என்ற அட்சரங்களால் போற்றப்படும் பாலமுருகன் திகழ்கின்றார்.

**பிறப்பும் ஆளுமை உருவாக்கமும்**

யாழ்ப்பாணம் நல்லூரில் சுப்புசாமி பஞ்சரத்தினம் தம்பதியரின் ஐந்து பிள்ளைகளுள் மூத்தவராக பாலமுருகன் 10 மார்ச் 1980 இல் பிறந்தார். தங்கை ஜானகி மற்றும் ரேவதி தம்பியர்கள் செந்தில்நாதன் மற்றும் சங்கர். செந்தில்நாதன் பாலமுருகனுக்கதவில் இசைவழங்கும் வித்துவான். செந்தில் பாலமுருகன் வழியில் நாதஸ்வரம் வாசிக்கும் வித்துவான்.

பாலமுருகனின் துணைவிகாயத்திரி. நாதஸ்வர இரட்டையர்களானகான மூர்த்திபஞ்சமூர்த்திஆகியோருள் அமரர் கானமூர்த்தியின் மகள்என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**நாதஸ்வரக்கல்வி**

பாலமுருகனின் பள்ளிக்கல்விநல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாலயத்தில் அமைந்தது. ஆயினும் சிறுவயதுமுதல் அவரது மூச்சுக்காற்றுநாதஸ்வரமாகவே அமைந்திருந்தது. தனதுஆறாவதுவயதில் நாதஸ்வரத்தைகையில் எடுத்தபாலமுருகன் தந்தையாருடன் சேர்ந்து எட்டு வயதினில் முதற் கச்சேரிமேற்கொண்டார்.

நாதஸ்வரக் கலையில் தந்தை சுப்புசாமி முதற்குரு. அவர் ஒருபல் துறைக் கலைஞர்.தவில் நாதஸ்வரம் வாய்ப்பாட்டு கொன்னக்கோல் எனப் பல நுட்பங்களைஅறிந்தவர். அவரிடம் கற்றதோடல்லாமல் இலங்கையின் மூத்தநாதஸ்வர வித்துவான்களிடமும் இக்கலையின் நுட்பங்களை பிஎஸ்பி கற்றுக் கொண்டார். நாதஸ்வர இசையின் நுணுகங்களை புகழ்பெற்ற நாதஸ்வர மேதை கலாசூரி என் கேபத்மநாதனிடம் நான்கு வருட குருகுலவாசம் செய்துகற்றார்.

பாலமுருகன் வாய்ப்பாட்டிலும் வல்லவர். இதற்கும் அவரதுதந்தையே குரு. இசைஞானத்தை இவரது இருபத்துநான்கு வயதுவரை அதாவதுதான் இறக்கும் வரை தந்தை வழங்கினார். முற்கால நாதஸ்வர வித்துவான்கள் சிலர் நாதஸ்வரம் வாசிப்பதுடன் வாய்ப்பாட்டிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். அந்தவரிசையில் சாஸ்திரிய சங்கீதத்தைத் தனது குரலிசையால் ஆளும் திறன் மிக்கவராகவும் பிஎஸ்பி விளங்குகின்றார்.

இலங்கையின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் விகேகானமூர்த்தி அவர்களுடன் நான்குவருடங்கள் உடன் வாசிக்கும் காலத்திலும் பிஎஸ்பி கற்றுக்கொண்டார். இக்காலத்தில் இலங்கையின் தேர்ச்சிபெற்ற மூத்தகலைஞர்கள் பலருடன் வாசித்துஅவர்களதுநுணுக்கங்களையும் பிஎஸ்பிஉள்வாங்கிக்கொண்டார்.

**கடல் கடந்த இரசிகர்கள்**

ஈழமண்ணில் நாதஸ்வர இரசிகர்களுக்குவிருந்தளிக்கதமிழகத்தில் இருந்துகலைஞர்கள் வந்தகாலம் ஒன்றிருந்தது. அந்த வரலாற்றைப் புரட்டிதென்னாட்டில் வாழும் நாதஸ்வர இரசிகர்களுக்கு விருந்தளிக்க யாழ்ப்பாணக் கலைஞர் பாலமுருகன் அடிக்கடி இந்தியாவுக்கு கலைப் பயணங்கள் மேற்கொள்கின்றார். குறிப்பாககேரளத்தில் அவருக்கென இரசிகர் பட்டாளமே இருக்கின்றது. சாஸ்திரிய சங்கீத நுணுக்கங்களை அறிந்த பெருஞ்சபை பாலமுருகனின் வாசிப்புக்கு மகுடிக்குக் கட்டுப்பட்ட நாக மெனதலை ஆட்டுவதும் சபாஷ் கொட்டுவதும் நம் மண்ணிற்குப்பெருமைதரும் செய்தியல்லவா?

கேரளாவில் உள்ள பிரபல ஆலயங்களில் இவரது கச்சேரி என்றால் நாதஸ்வர இரசிகர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுகின்றனர். இதனை விடத் தமிழகம் ஆந்திரம் கர்னாடகம் மகாராஷ்டிரம் என மாநிலங்கள் பலவற்றிலும் பிஎஸ்பிக்கு என இரசிகர்கள் நிறையப் பேர் உள்ளனர்.

நம் மண்ணைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகள் தாங்கள் வாழும் இடங்கள் தோறும் பாலமுருகனை அழைத்து



இசைவிருந்து பெற்றுச் சுவைக்கின்றனர். அண்மையில் அமெரிக்க அரசின் இரு உயர் அங்கீகார விருதுகள் பாலமுருகனின் விருதுப் பட்டியலில் இணைந்து கொண்டன என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் காஞ்சிகாமகோடி சங்கரமடத்தின் ஆஸ்தான வித்துவானாகவும் தருமபுர ஆதீனத்தால் நாதஸ்வர கலாநிதி பட்டம் வழங்கப் பெற்றவராகவும் விளங்குகின்றார்.

**தனித்துவ வாசிப்பு**

தற்கால சூழலில் எங்கள் மண்ணில் திரை இசையை மையப்படுத்திய நாதஸ்வர வித்துவான்களே இரசிகர்களால் கவரப்படுகின்றனர். ஆயினும் இவர்களில் இருந்து பாலமுருகன் மாறுபட்டவராகவே விளங்குகின்றார். சங்கீதம் தெரியாதபாமர இரசிகனும் தலையாட்டித் தாளம் போடும் வண்ணம் இசையால் அனைவரையும் ஈர்க்கும் திறன் பாலமுருகனுக்குக் கடவுள் கொடுத்த வரம் என்றால் மிகைப்படாது.

இராக ஆலாபனை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒரு இராகத்தை ஒருமணி நேரத்திற்கும் மேலாக வாசித்து இரசிகர்களை இசையால் மயக்கும் ஆற்றல் இவருக்குக் கைவந்தகலை. இன்னும் - சீவாளியை வாயைவிட்டுஎடுக்காது நீண்டகால அடைவில் கையாளும் திறனையும் இவர் பெற்றிருக்கின்றார். நாதஸ்வரவித்துவான்கள் பலர் வாசிக்கும் சந்தர்ப்பங்கள் அமைகின்ற போது அவர்களுள் பிஎஸ்பிதனித்துத் தெரிவார்.


**இசை வாரிசுகள்**

பாலமுருகனுக்கு நேரடி வாரிசுகள் மூவர். அவர்களுள் சாரங்கன்,சரஜ்ஞன் தந்தை வழியில் நாதஸ்வரவித்துவான்களாக வளர்ந்து வருகின்றனர். இருவரும் தந்தையுடன் சேர்ந்து பல இடங்களிலும் புகழ்க்கொடி நாட்டி வருகின்றனர். மகள் தரங்கினி பேராதனைப் பல்கலைக்கழக மாணவி. தென்னிந்திய தொலைக்காட்சி வரை புகழ் பெற்று ஐரோப்பிய நாடுகளிலும் இசைப் பயணம் மேற்கொண்ட சிறப்பிற்குரியவர். சகோதரன் சங்கர் - பிஎஸ்பி வழியில் வாசிக்கும் நாதஸ்வர வித்துவான் அத்துடன் பெறாமகன் சபரீசனும் பிஎஸ்பி வழியில் நாதஸ்வரவித்துவானாக வளர்ந்து வருகின்றார். இவர்களைவிட பல நாதஸ்வரக் கலைஞர்கள் பிஎஸ்பியிடம் அவ்வப்போது நாதஸ்வர நுணுக்கங்களைப் பயின்று வருகின்றனர்.

**சாதனைத் தமிழன்**

எம் மண்ணிற்குப் பெருமை சேர்த்தவர்களுக்குடான் தொலைக்காட்சி வழங்கும் சாதனைத் தமிழன் விருது மிகப்பெரிய அங்கீகாரமாக விளங்குகின்றது. சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செலவர் கலாநிதி ஆறு. திருமுருகன், திருமறைக்கலாமன்ற இயக்குநர் (மறைந்த) அருட்கலாநிதிநீ.மரியசேவியர், நாடகத் துறைப் பேராசிரியர் சி. மௌனகுரு முல்லை மண்ணின் தொழில் முயற்சியாளர் சாஜிராணி,யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் இசைவாணர் மு. கண்ணன் பசிப்பிணிபோக்கும் சந்நிதியான் ஆச்சிரமமுதல்வர் சு. மோகனதாஸ் சுவாமிகள் என்ற வரிசையில் 2025 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை நாதஸ்வரச் சக்கரவர்த்தி கலாநிதி பிஎஸ் பாலமுருகன் அவர்களுக்கு வழங்குவதில் டான் குழுமம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றது.

**விருதுக்குழு சார்பில்**
**செந்தமிழ்ச் சொல்லருவி**
**சந்திரமௌலீசன் லலீசன்**
**(முதல்வர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனவாதமற்ற...

உருவாகின்றன. குறிப்பாக, மக்கள் என்றவகையில் உங்களுக்கு ரும் எதிர்பார்ப்புகள் இருக்கும். அதேபோன்று நாடென்ற வகையில் எமக்கு புதிய எதிர்பார்ப்புகள் உள்ளன.

தற்போது இருப்பதைவிட சகல வகையிலும் வளமான செழிப்பான நாட்டை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். நாம் வளமான நாடு என்று எதனை குறிப்பிடுகிறோம்? பணம் மற்றும் கட்டுமானங்களின் ஊடாக வளம்பெற்ற நாட்டையா அவ்வாறு சொல்கிறோம்? அதனை விட அதிகளவான துறைகளில் வளமான நாட்டை உருவாக்க வேண்டும். நாம் ஆட்சியை ஏற்று ஒரு வருடத்தைவிட சற்று அதிக காலம் சென்றுள்ளது. வரலாற்றில் மிகக் குறைவான இனவாத மோதல்கள் நடந்த - இனவாதத்தை ஊக்குவிக்கும் இயக்கங்கள் பலவீனமடைந்த தேசிய ஒற்றுமைக்காக போராடிய வருடம் இது.

ஏனைய காலங்களில் பல்வேறு இடங்களில் இனவாத மோதல்கள், இனவாத போக்குகள் நடந்தன. இனவாதமற்ற தேசிய ஒற்றுமை நிறைந்த வளமான நாடே எமக்குத் தேவை. எங்கு பிறந்தாலும் எந்த மொழி பேசினாலும் எந்த மதத்தை பின்பற்றினாலும் எத்தகைய கலாசார சூழலில் வாழ்ந்தாலும் அனைவருக்கும் எமது நாட்டில் கௌரவமான பிரஜையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதே எமது அபிலாசை.

இனவாதமற்ற வளமான நாடே எமக்குத் தேவை. எம்மிடையே வேறுபட்ட கலாசாரங்கள் இருக்கின்றன. ஒரு நாடு எவ்வாறு அழகாகும்? மக்கள் மத்தியில் எவ்வாறு நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்? இந்த அனைத்து கலாசாரங்களினதும் கௌரவம் - மதிப்பு மற்றும் அங்கீகாரம் என்பன மிக முக்கியமானது. நாம் அத்தகைய நாட்டை உருவாக்க வேண்டும். அதுதான் எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

பொருளாதார ரீதியில் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்ளும் மக்களுக்கு இருப்பதைவிட சிறந்த வாழ்க்கை நிலையை பெற்றுக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, சிறந்த வீட்டை வழங்குவது சிறந்த கல்வியை வழங்குவது ஆரோக்கியமான - வாழ்வுக்காக சிறந்த சுகாதார சேவையை ஸ்தாபிப்பது விவசாயம், மீன்பிடித்துறை என்பவற்றை முன்னேற்றி சிறந்த வருமான வழியை அமைத்துக் கொடுப்பது இளைஞர் - யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது போன்றவை அரசாங்கம் என்ற வகையில் எமக்குள்ள எதிர்பார்ப்புகளாகும்.

இங்கிருக்கும் அநேகமானோர் கடந்த பொதுத் தேர்தலில் எம்மீது நம்பிக்கை வைத்து யாழ். மாவட்டத்தை முதன்முறையாக வெற்றி கொள்ள பங்களித்தவர்களாவர். நீங்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை சிறிதளவாவது வீழ்ச்சியடைய இடமளிக்காது இனவாதமற்ற தேசிய ஒற்றுமைமிக்க நாட்டை உருவாக்குவோம்.

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அனைவரும் மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் வாழும் நாட்டை நாம் உருவாக்குவோம். இங்கு திரண்டுள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு அதுதான் என்பதை நாம் அறிவோம். மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக நாம் தயக்கமின்றி எமது பொறுப்பை நிறைவேற்றுவோம். இந்த தைப்பொங்கல் தினத்தில் ஒரு பிரார்த்தனை செய்வோம். நாம் பிரியாதிருப்போம் - நாம் ஒன்றுபடுவோம். சிறந்த நாட்டை எமது மக்களுக்காக உருவாக்குவோம் - அனைவரும் திடஉறுதியுடன் முன்வர வேண்டுமென பிரார்த்திக்கிறேன்"" என்றும் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதியின்...

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர குமார பங்கேற்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு இலங்கை தமிழ் அரசு கட்சியினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை என்று எமது கட்சி முடிவெடுத்துள்ளது.

இதற்கு பிரதான கரணம் "பிரஜா சக்தி" எனும் பெயரில் அரச இயந்திரங்களுக்கு சமாந்தரமாக தமது கட்சியை சார்ந்தவர்களை கொண்டு ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து நாம் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளோம். உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்களை திசை மாற்றியுள்ளனர்.

குறிப்பாக, வடக்கு - கிழக்கில் தமக்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் கிடைக்காத இடங்களில் இத்தகைய செயல்பாட்டை முன்னெடுத்துள்ளனர். சட்டரீதியாக உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைகளை வறுமை ஒழிப்பு எனும் பெயரில் நேரடியாக மத்திய அரசு செய்வதை சட்ட ரீதியாக சவாலுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுனாமி ஏற்பட்டபோது, வடக்கு - கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயன்றபோது இதே ஜே.வி.பி.யினர்தான் உச்ச நீதிமன்றுக்கு சென்று அதற்கு எதிராக தடை உத்தரவை பெற்றனர். அதற்கு அவர்கள் நீதிமன்றில் முன்வைத்த வாதம், அரச அமைப்புக்கு சமாந்தரமாக எந்தவோர் அமைப்பையும் செயல்பட அனுமதிக்க முடியாது என்பதே.

சுனாமியால் மிக மோசமாக பாதிப்படைந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை மீள்கட்டுமானம் செய்ய முடியாது செய்தவர்கள் அவர்கள். இதே சட்ட அடிப்படையில் அவர்கள் இன்று அரச நிறுவனங்கள் , உள்ளூராட்சி சபைகள் ஊடாக சட்ட ரீதியாக செய்ய வேண்டியதை அதற்கு சமாந்தரமாக தமது கட்சிக்காரர்களை உள்ளடக்கிய அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக செய்ய முயல்கின்றனர்.

அரச உதவிகள் , நிவாரணங்கள் , நிதிகளில் தங்களின் கட்சியை வளர்க்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். அவர்கள் பாவித்த அதே சட்ட கோட்டபாட்டை உபயோகித்து அதனை நிறுத்த முயற்சி எடுப்போம். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்முகமாக முதல் கட்டமாக ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வை புறக்கணித்துள்ளோம் - என்றார். (ஐ)

## மன்னார்...

தூய எரிசக்தியை சேர்ப்பதோடு, சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முன்னோடித் திட்டமாகவும் அமையும் என்றும் இந்தத் திட்டம் 18 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த காற்றாலை மின் திட்டத்தை ஹேலிஸ் பென்டன், ஹேலிஸ் குழுமத்தின் அங்கமான ஹேவிண்ட் வன் லிமிட்டெட் நிறுவனம், மின்சார சபையுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நேற்றைய தினம் நடந்த நிகழ்வில் வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வலுசக்தி பிரதி அமைச்சர் இலியாஸ் முஹம்மது அஹ்ரம் , கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், செ. திலகநாதன் மாவட்ட செயலாளர் கே. கனகேஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டனர். (ஐ)

## தமிழ் அரசு...

தலைவர்களும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பர் என்றும் அறிய வருகிறது. (ஐ)

## டிப்பர்...

பயணித்த இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

தைப்பொங்கல் தினமான நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் நாவற்குழி, ஏ-32 நெடுஞ்சாலையில் (யாழ்ப்பாணம் - மன்னார்) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால் அதிவேகமாக வந்த டிப்பர் கட்டுப்பாட்டை இழந்து மின்சார கம்பம், தொலைபேசி கம்பம், மதில் என்பவற்றுடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், யாழ்ப்பாணம் - அச்சுவேலியை சேர்ந்த நாகராஜா ஜீவராஜ் (வயது 24) கிளிநொச்சி - வட்டக்கச்சியை சேர்ந்த ராஜீவன் விதுசன் (வயது - 20) ஆகியோரே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஒவ்வொரு...

அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் பண்டிகையின் தேசிய விழா பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த வருட தைப்பொங்கல் தினத்தில், ஒற்றுமை, பரஸ்பர மரியாதை மற்றும் ஒவ்வொரு சமூகத்தின் கலாசார மற்றும் மத உரிமைகளைப் பாதுகாப்பதன் அடிப்படையில் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியுடன் செயல்பட அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக குறிப்பிட்டார்.

நாடு புதியதொரு யுகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், கொள்கை மற்றும் மனப்பான்மை சீர்திருத்தங்கள் மூலம் நாட்டை இயல்பு நிலைக்கு மீட்டெடுக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இது சவாலானது என்றாலும், அது ஓர் அத்தியாவசிய பணி. தைப் பொங்கல் பண்டிகை, ஒற்றுமையின் முக்கியத்துவத்தையும், இயற்கையுடனான நமது தொடர்பையும், நமது அன்றாட வாழ்வில் நன்றியுடன் இருப்பதன் மதிப்பையும் நமக்கு நினைவூட்டுகிறது. இன்று இந்தத்தேசிய தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் சர்மத தலைவர்கள், அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், சிறப்பு அதிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## மறியலில்...

தண்ணீர் அருந்தாது போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது.

கரையோர பாதுகாப்புத் திணைக்களம் பல இடங்களில் தனது சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் திருகோணமலை கடற்கரைக்கு அருகில் உள்ள சம்புத்த ஜயந்தி போதி ராஜ விகாரைக்கு மாத்திரம் தனது சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டியே அவர் இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரையோரமாக அவர் சட்டவிரோத கட்டுமானங்களை அமைத்திருந்தார். இதைத் தொடர்ந்து, அந்த கட்டுமானத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. இதன் மூலம் குழப்ப நிலை உருவானது. இதைத் தொடர்ந்து, குழப்பநிலைமையை உருவாக்கியமைக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரினால் 11 பேருக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பலாங்கொடை கஸ்ஸப தேரர் உள்ளிட்ட 4 பௌத்த பிக்குகளும், 5 பொதுமக்களுமாக 9 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். ஏனைய இருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போர்...

இயங்கும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல் திட்டம் கடந்த 13ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை தொடர்பிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கையில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கையானது, இலங்கையில் நிகழ்ந்த சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான போராட்டத்தில் முன்னேற்றகரமானதொரு நகர்வாகும்.

கடந்த 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் யுத்தகால பாலியல் வன்முறைகள் வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட, முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன் அவற்றைப் போர் குற்றங்களாகவோ அல்லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கருதமுடியும்.

இந்த அறிக்கையின் ஊடாகக் கண்டறியப்பட்டிருப்பதன் பிரகாரம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுள்ள குற்றங்கள், அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தைக் காண்பிக்கின்றன.

இதேவேளை இலக்கிடப்பட்ட தடைகள், குற்றவியல் விசாரணைகள், வழக்குத்தாக்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச நாடுகளின் அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## உணவு...

அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 11 இலட்சம் பேருக்கு உடனடி உணவு, விவசாயம் மற்றும் ஊட்டச்சத்து உதவியை அவசரமாக தேவைப்படுகிறது.

2025 -26 பெரும் போக பயிர்ச் செய்கை காலப்பகுதியில் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி துறைகளுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. இது நீண்டகால உணவு உற்பத்திக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் விதைகள், உரங்கள் பற்றாக்குறை, சேதமடைந்த நீர்ப்பாசன கால்வாய் அமைப்புகள் காரணமாக திரும்பப் பெற முடியாத இழப்புகள் ஏற்பட்டு, நாட்டின் உணவு பாதுகாப்பு மேலும் மோசமடையும் - என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு இந்தியா வழங்கும் மனிதாபிமான உதவி தொடரும்!

## தூதுவர் சந்தோஷ் ஜா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 16

இலங்கைக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி திட்டத்தின் கீழ், குறித்த மனிதாபிமான திட்டங்கள் மேலும் வலுப்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை நேற்று முன் தினம் சந்தித்தபோது அவர் இந்த விடயங்களை கூறினார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் உத்தி யோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதி விடப்பட்டுள்ளது.

டித்வா பேரிடரின்போது இந்தியா வழங்கிய உதவிகளுக்கு ரவூப் ஹக்கீம் நன்றி தெரிவித்ததாகவும் அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஏப்ரல் மாதம் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்!

## அரிசி ஆலை உரிமையாளர் சங்கம்

கொழும்பு, ஜன. 16

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நாட்டில் பச்சை அரிசி மற்றும் நாட்டரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக மரதகஹமுல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகள் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சங்கத்தின் தலைவர் பி. கே.ரஞ்சித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இன்றைய நிலவரப்படி மரதகஹமுலவில் முதல் தர நாட்டரிசி ஒரு கிலோவின் மொத்த விலை அதிகபட்சம் 225 ரூபா வரை உள்ளது. வெள்ளை பச்சை அரிசி 208 முதல் 212 ரூபா வரையிலும், சிவப்பு பச்சை அரிசி வகைகள் 205 முதல் 210 ரூபா வரையிலும் விற்பனையாகின்றன.

இருப்பினும், சம்பா மற்றும் கீரி சம்பா மிக அதிக விலையில் உள்ளன. கீரி சம்பா 340 ரூபாவையும், சம்பா 260 ரூபாவையும் கடந்து செல்கின்றன.

சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியின் விலை அதிகரிக்கும் போது, விவசாயிகள் அவற்றை பயிரிடச் செல்வதால் வெள்ளை பச்சை அரிசி மற்றும் நாட்டரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும். ஆகையால் நெல் விலை அதிகரிப்பதாயின், இந்த மூன்று வகைகளுக்கும் விவசாயிகளுக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும்.

பண்டிகைக் காலத்தில் சம்பா மற்றும் கீரிச் சம்பா விலைகள் மேலும் அதிகரிக்கலாம்-என்றார். (அ)

# பாடசாலைகளில் டிஜிற்றல் வசதி சமநிலையாக இருக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

கல்விச் சீர்திருத்தங்களின் முக்கிய முன்னுரிமைகள் பாடசாலைகளுக்கிடையிலான டிஜிற்றல் சமநிலை குறைபாடுகளை குறைக்கவும், மாணவர்கள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும்போது பாதுகாப்பு உறுதி செய்வதாகவும் இருக்கவேண்டும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியா, தெரிவித்தார்.

நேற்று நடத்தப்பட்ட கல்வி டிஜிற்றல் வழிகாட்டல் தொடக்க விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

முறையான டிஜிற்றல் வசதிகள் இல்லாத பாடசாலைகள் அடையாளம் கண்டு, அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்பை வழங்க வழி செய்ய வேண்டும்.

மேலும், தொழில்நுட்பத்தை குழந்தைகளுக்கு பாதுகாப்பான, நண்பராகக் கருதும் முறையில் அறிமுகப்படுத்த வேண்டும்.

சீன அரசின் நிதி ஆதரவுடன் நடைபெறும் இந்த திட்டத்தில் தேசிய கல்வி கிளவுட் அமைப்பு, தொலைதூர கல்வி வசதிகள் மற்றும் சுமார் 900 ஏ.ஐ செயல்படுத்தப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# பெண் அரச ஊழியர்கள் வீட்டில் இருந்தே வேலை!

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் பெண் அரச ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்றுவதற்கு அனுமதிக்கும் புதிய முன்மொழிவு குறித்து மகளிர் விவகார அமைச்சு தற்போது தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்வைத்த இந்த ஆலோசனையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த மகளிர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன, இந்த யோசனையை "திறமையான மற்றும் மிகவும் அவசியமான ஒன்று" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் (உதாரணமாக பாகிஸ்தான்) ஒப்பிடுகையில், இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களை அதிகளவில் வேலைவாய்ப்புச் சந்தையில் இணைத்துக்கொள்ள முறையான திட்டங்கள் நாட்டுக்குத் தேவை என்றும், இந்த முன்மொழிவு மிகவும் முற்போக்கானது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சரவை மட்டத்தில் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

இந்த யோசனையை ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான சமிந்ரனி கிரியெல்ல முன்வைத்தார்.

பெண்கள் வீட்டிலிருந்தே பணியாற்ற அனுமதிப்பதன் மூலம், நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பை கணிசமாக அதிகரிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இலங்கைக்கு மியன்மாரிடம் இருந்து 500 மெற்றிக்தொன் அரிசி நன்கொடை

கொழும்பு, ஜன. 16

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இந்நாட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்காக மியன்மாரிலிருந்து 500 மெற்றிக் தொன் அரிசி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அரிசி கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு அந்த நாட்டின் யங்கூன் துறைமுக வளாகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் பிரபாஷினி பொன்னம்பெரும உள்ளிட்ட அந்நாட்டின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# சிறீதரனை சந்தித்தார் அவுஸ்திரேலிய தூதுவர்



யாழ்ப்பாணம், ஜன. 16

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் மத்தியூ டக்வேர்த் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுக்களின் தலைவருமான சிவஞானம் சிறீதரனுக்குமான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான பயணங்களில் உள்ள இடைவெளிகள், பொறுப்புக் கூறல், நீதியை நிலை நாட்டுவதில் இன்றைய அரசும் அக்கறையுடன் செயற்படாமை, வடக்கு கிழக்கில் இன்றும் விடுவிக்கப்படாமல் இராணுவ வசம் உள்ள தமிழ் மக்களின் காணிகள், புத்த விகாரைகள் அமைத்து சிங்கள குடியேற்றங்களை விரிவுபடுத்தும் அரசு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் விரிவாக பாராளுமன்ற உறுப்பினரால் தூதுவருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் தொழில் வாய்ப்புக்கள், முதலீடுகளை உருவாக்குதல் தொடர்பிலும் நிரந்தரமான நீடித்து நிலைக்கக்கூடிய கௌரவமான அரசியல் தீர்வை எட்டுவதில் சர்வதேச சமூகத்தின் பங்கும் அழுத்தமும் எவ்வளவு முக்கியமானது என்பதையும் சிறீதரன் தூதுவருக்கு எடுத்துக் கூறினார். (அ)

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு 10 நாள்கள் அவகாசம்!

கொழும்பு, ஜன. 16

இலவச சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கான இணக்கப்பாடுகளை, நடைமுறைப்படுத்துவதற்கு தவறினால், நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அத்துடன், நாட்டின் சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் உண்மையான பிரச்னைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான எந்தவொரு குறுகிய கால மற்றும் நீண்ட காலக் கொள்கைகளும், 2026ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை என அந்த சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் காரணமாக சுகாதாரத்துறையினர் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்த பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சரால் வழங்கப்பட்ட எழுத்துமூல இணக்கப்பாடுகளின் அடிப்படையில் குறித்தப் போராட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இதனிடையே, அண்மையில் இடம்பெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் மருத்துவ சங்கத்தினரின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த காலப்பகுதிக்குள் பிரச்னைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கத் தவறினால், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு நிறைவேற்றுக் குழுவினால் ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# போதைப்பொருள்கள் பாவித்துவிட்டு வாகனம் ஓட்டுவோரை கண்டறிய நடமாடும் ஆய்வுகூடம்

கொழும்பு, ஜன. 16

போதைப்பொருள் பயன்படுத்திவிட்டு வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிவதற்காக நடமாடும் ஆய்வுகூடம் ஒன்று தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துப் பிரிவு மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்தார்.

போதைப்பொருள் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் 7,000 இக்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒருவர் மது அருந்துவதென்றால் அது அவருடைய உரிமை, நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் மது அருந்துவதாயின், விசேடமாக மது அருந்தாத ஒருவரை அழைத்துச் செல்லுங்கள்.

இல்லையெனில் வாடகை வாகன சேவையைப் பயன்படுத்துங்கள். அல்லது வேறொரு சாரதியை ஏற்பாடு செய்யுங்கள் என நாம் தெளிவாக அறிவுறுத்தியுள்ளோம்.

கடந்த வருடம் வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 31மூ ஆனோர் பாதசாரிகள் ஆவர். அதே போல் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் 31 வீதமாகவும் பின்னால் அமர்ந்து சென்றவர்கள் 7 வீதம் முதல் 8 வீதமாகவும் உள்ளனர்.

போதைப்பொருள் பரிசோதனைக்காகத் தற்போது ஒரு தொகுதிக்கு அனுமதி கிடைத்துள்ளது. தேசிய மருத்துவ நிறுவகத்திடம் இப்போது ஒரு நடமாடும் ஆய்வுகூடம் உள்ளது.

அது ஹெரோயின், கஞ்சா, பாபுல், ஐஸ் ஆகிய 4 வகை யான போதைப்பொருட்களைப் பரிசோதிக்கும் வசதியைக் கொண்டது. தற்போது அந்த மருத்துவ வாகனத்தையும் இணைத்துக்கொண்டு சோதனைகளை முன்னெடுத்துள்ளோம். எனவே போதைப்பொருள் மற்றும் மதுபோதையில் இருக்கும் சாரதிகள் மீது சட்டம் கடுமையாகப் பாயும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.